முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருவள்ளுவர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.09.2018, வியாழக்கிழமை

1. **சற்குருநாதனே அரங்கா போற்றி**
**சங்கடம் போக்கும் அரசா போற்றி**
**அற்புதம் நிகழ்த்தி மக்களிடை**
**ஆன்ம பலம் பெருக்கி உயர்த்த**

2. உயர் குருவாக வந்த ஞானியே
ஓங்கார ஆறுமுக அரங்கனுன்
தயவு பெற்றோர் தேறுவரென
தக்க ஒளி சூட்சும நூலை

3. நூலை **விளம்பி தரிவை திங்கள்**
**நிலமதனில் சதுர் திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 4ம் நாள் 20.09.2018, வியாழக்கிழமை)**
**ஞாலமதில் திருவள்ளுவர் பெருமானும்**
நாட்டிடுவேன் உலகோர் நலம் பெற

4. நலம் தரும் அறம் வளர்க்கின்ற
ஞானதேசிகனார் தருமத்தாலே
பலம்பெற பரத பூமி எங்கும்
பசுமை பயிர் வளம் நீர்வளம்

5. நீர்வளம் இயற்கையின் கருணை
நிலைத்து நீடித்து வருகுதப்பா
பார்த்துரைப்பேன் அரங்கன் தருமமும்
பழுதுபட்டால் பேரிடர் உருவாகும்

6. ஆகுமே வறுமை கொடுமை
ஆளுமைக்கு ஆபத்து கெடுதி
வகைபடா ஆக்ரோசம் பெருகி
வாழ்வாதாரத்தையே இயற்கை அழிக்கும்

7. அழிவினை தொடர்ந்து மேலும்
ஆகாத களவு கொலை கொள்ளை
பழிபாவ செயல்கள் பெருக நேரும்
பாதுகாப்பாய் இருக்கும் அரங்க ஞானி

8. அரங்க ஞானி தருமம் காத்திட
ஆளுபவர் அரச துறை மேலோர்கள்
தரங்கையில் தானே முன் வந்து
தடைபடா தருமம் தொடர பொருளுதவி

9. உதவி செய்து காத்திட
உலகமெங்கும் உயர் தருமம்
ஆதரவு பெற்று தயவு பெருகிட
அழிவின் நோக்கமான யுத்தகளங்கள்

10. களங்கள் விலகி அமைதி போக்கும்
கருணை நோக்கிலே அகிலமே
வளங்கள் காணும் பாதுகாப்பாய்
வல்லமைபெறும் தருமபலத்தால்

11. தருமவான் அரங்கன் காட்டும்
தருமநெறி தண்டாயுதன் நெறி
முருகா என மக்கள் போற்றி வர
முழுமைபட தரும ஞானயுகமாக மாறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

—சுபம்—

**முருகப்பெருமான் துணை**

**மகான் திருவள்ளுவர்பெருமான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகை காத்து வழிநடத்துகின்ற உண்மை ஆன்மீகம் போதிக்கும் சற்குருநாதனே அரங்கமகா தேசிகனே போற்றி! போற்றி! மக்களின் துன்பங்களைப் போக்கும் ஞானஅரசனே ஆறுமுக அரங்கனே போற்றி! போற்றி! உலகினில் பல அற்புதங்களை நிகழ்த்தி மக்களிடையே ஆன்ம பலம்தனை அதிகப்படுத்தி உயர்வான நிலையை மக்கள் அடைந்திட உயர் ஞான குருவாக வந்துதித்த மகா ஞானியே ஓங்காரநாதன் ஆறுமுக அரங்கமகாதேசிகனே உமது தயவினை பெற்றவர்கள் ஜென்மத்தைக் கடைத்தேற்றுவார்கள் என்றே கூறியே உலகம் முழுதும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருமைகளை கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 4ம் நாள் 20.09.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருவள்ளுவப்பெருமான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருவள்ளுவப்பெருமான்.

எல்லா நலங்களையும் தருகின்ற அறத்தினை வளர்க்கின்ற ஞானதேசிகனாரின் தருமத்தினால் நாடு பலம் பெற்று பாரத தேசம் முழுதும் பசுமையும் பயிர் வளமும் நீர்வளமும் பெருகி இயற்கையின் கருணை நிலைத்து நீடித்து வருகிறதப்பா. அப்படிப்பட்ட அருள் பாதுகாப்பை நாட்டிற்கு வழங்கி வருகின்ற அரங்கனின் தர்மங்கள் பழுதுபட்டுவிட்டால் உலகினில் இயற்கை பேரிடர் உருவாகும் சூழல் உருவாகிடுமப்பா. நாட்டினில் வறுமையும் கொடுமையும் நாடெங்கும் பெருகி நாட்டை ஆள்பவர்க்கும் ஆட்சிக்கும் கெடுதி உண்டாகும்.

உலகினில் தர்மபலம் குறைவதினால் இயற்கையும் ஆக்ரோஷம் கொண்டு மக்களின் வாழ்வாதாரத்தையே குலைக்கும் வண்ணமாக பேரழிவைத் தரும். இயற்கை பேரழிவினாலும் கொடும் வறட்சியினாலும் நாட்டினில் ஜீவாதாரம் சீர்கெட்டுபோய் இயற்கை அழிவினை தொடர்ந்து நாட்டினில் களவு செயல்கள் பெருகும். கொலை, கொள்ளைகள் அதிகமாகும். பழிபாவத்திற்கும் அஞ்சாமல் நாட்டினில் பழிபாவச் செயல்கள் அதிகமாகும்.

நாட்டினை நல்வழிப்படுத்த வல்லதும் மக்களை நன்மக்களாக ஆக்கிட வல்லதும், ஏன் இயற்கை பேரழிவையும் தடுத்து நிறுத்தும் பாதுகாப்பு கவசமாக விளங்கி நிற்கும். அரங்கனின் தருமவேலி பலம் இழக்காமலிருக்க உலக மக்களே நீங்கள் அரங்கனின் தருமத்தினை காத்திட வேண்டும். ஆதலினால் ஆட்சி செய்பவர்கள் அரசு துறைகளின் மேல் பதவி வகிப்போர்கள்

ஆகியோர் தானே முன்வந்து அரங்கனின் தர்மம் தடைபடாமல் தொடர்ந்து நடந்திட தாராளமாய் பொருளுதவிகளைச் செய்து அரங்கனின் தருமத்தை காத்திட உலகமெங்கும் அரங்கமகான் தயவால், கருணையால் உயர்தருமம் பெருகிடும்.

உலகமெங்கும் தர்மம் பெருகிட தயவு பெருகிட அழிவிற்கு காரணமாக உள்ள யுத்தங்கள் இல்லாது போய்விடும். யுத்தங்கள் மூள்வதற்கு காரணமாக உள்ள கலகங்கள் எல்லாம் விலகி யுத்தங்களும் விலகி நாடுகளில் அமைதி போக்கும் ஒவ்வொரு நாடும் கருணை நோக்கில் நடந்து உலகமே அமைதியாகி உலகமே சர்வ வளங்களையும் காணுமப்பா. ஞானிகள் அருள்பலத்தால், தர்மபலத்தால் உலகம் பாதுகாப்பாய் வல்லமைகளைப் பெற்றுத் திகழும்.

தர்மவான் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் அற்புதமான ஜென்மத்தைக் கடைத்தேற்றும் வல்லமைமிக்க தருமநெறியானது தண்டாயுதபாணி முருகப்பெருமானின் நெறியாகும். முருகா, முருகா, முருகா என மக்களெல்லாம் முருகப்பெருமானை பயபக்தியோடு வணங்கி போற்றி வர, இந்த உலகம் முழுமையான தரும உலகமாக ஞானஉலகமாக மாறி இந்த யுகமே தரும ஞானயுகமாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருவள்ளுவப்பெருமான்.

–சுபம்–